பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

09 03 2025 **SUNDAY** 12 40**PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. விண்வெளி மற்றும் அணுசக்தி துறையில் பெண் விஞ்ஞானிகள் சாதனை படைத்து வருவதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

2. தேசிய கல்விக் கொள்கை தாய்மொழிக் கல்வியை ஊக்குவிப்பதாக மகாராஷ்ட்ர மாநில ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

3. கல்ஃபோர்னியாவில் உள்ள கோவில் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது

4. காதி மற்றும் கதர் தொழில் விரைவான முன்னேற்றம் கண்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

5. கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் ஜம்மு காஷ்மீரின் குல்மர்கில் இன்று தொடங்குகிறது.

>>>>><<<<<

விண்வெளி மற்றும் அணுசக்தி துறையில் பெண் விஞ்ஞானிகள் சாதனை படைத்து வருவதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், தேசிய அளவில் செயல்படுத்தப்பட்டு வரும் பல முக்கிய திட்டங்களில் பெண்கள் தலைமை பொறுப்பில் உள்ளதாக குறிப்பிட்டார்.

ஆராய்ச்சிப் பணிகளில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதற்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

அறிவியில் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி குழுமத்தின் ஆய்வகங்களில் 6 பெண் இயக்குநர்கள் பணியாற்றி வருவதை திரு. ஜிதேந்திர சிங் சுட்டிக்காட்டினார்.

>>>>><<<<<

தேசிய கல்விக் கொள்கை தாய்மொழிக் கல்வியை ஊக்குவிப்பதாக உள்ளது என்று மகாராஷ்ட்ர மாநில ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய கல்விக் கொள்கையில், மூன்றாவது மொழியாக எந்த மொழியையும் கற்றுக் கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கைளால் தமிழகத்தில் உள்ள நாடாளுமன்ற தொகுதிகள் குறையாது என்பதை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெளிவுபடுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவானதாக இருக்கும் வகையில் தேசிய கல்விக் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளதாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>><<<<<

கலிஃபோர்னியாவில் உள்ள கோவில் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், காழ்ப்புணர்ச்சி காரணமாக, நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டரீதியாக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள கோவில்கள் உள்ளிட்ட வழிபாட்டு தலங்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று வெளியுறவு அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>><<<<<

பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பது மற்றும் பெண்களுக்கான உரிமைகள் மற்றும் அதிகாரமளித்தல் தொடர்பான சர்வதேச மகளிர் ஆணையக் கூட்டம் நியூயார்க்கில் நடைபெறவுள்ளது. இந்த கூட்டத்தில் இந்தியா சார்பில் மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி. அன்னபூரணி தேவி கலந்து கொள்ளவுள்ளதாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை தொடங்கி இம்மாதம் 21ஆம் தேதிவரை இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் பெய்ஜிங் பிரகடனத்தை அமல்படுத்துவது குறித்தும், பல்வேறு துறைகளில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பது குறித்தும் விவாதிக்கப்படவுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மணிப்பூரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் ஏராளமான ஆயுதங்கள், வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. **Jiribarn** மாவட்டத்தில் உள்ள **Bidyanagar** மற்றும் **New Alipur** கிராமப்புற பகுதிகளில் அஸ்ஸாம் ரைஃபில்ஸ் காவல்துறையினர் மற்றும் மத்திய ரிசர்வ் காவல்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் அம்மாநில காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இதுகுறித்து விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அந்த தகவல்கள் மேலும் கூறுகின்றன. அம்மாநிலத்தில் பாதுகாப்பு மற்றும் அமைதியை பராமரிக்கும் வகையில் பாதுகாப்புப் படையினர் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

>>>>><<<<<

காதி மற்றும் கதர் தொழில் விரைவான முன்னேற்றம் கண்டு வருவதாக காதி கிராம தொழில்துறை ஆணையத்தின் தலைவர் திரு. மனோஜ்குமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கருத்தரங்களில் காணொலி மூலம் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், காதி பொருட்களின் விற்பனை ஐந்து மடங்கு அதிகரித்துள்ளதாக கூறினார்.

பிரயாக்ராஜில் நடைபெற்ற மகாகும்பமேளாவின் போது, 12 கோடி ரூபாய்க்கும் அதிகமான காதி தயாரிப்புகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

கிராமப்புறங்களில் தேன் சேகரிப்பு இயக்கத்தை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

இதனை ஊக்குவிக்கும் வகையில், 6 மாநிலங்களில் உள்ள தேன்வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு 2 ஆயிரத்து 500க்கும் அதிகமான தேன் சேகரிக்கும் பெட்டிகளை அவர் வழங்கினார்.

மத்திய அரசின் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் கடந்த நிதியாண்டில் 10 லட்சத்திற்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக திரு. மனோஜ்குமார் கூறினார்.

>>>>><<<<<

திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம், சென்னையில் இன்று நடைபெற்றது.

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வில் திமுக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

>>>>><<<<<

தமிழகத்தின் சிவகங்கை மாவட்டம் கீழடியில் அகழாய்வுப் பணிகளை பார்வையிடும் வகையில் அருங்காட்சியகமாக அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதையடுத்து, பார்வையாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகளில், ஆண்டுதோறும் வன விலங்கு கணக்கெடுப்பு பணிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக ஈரநில பறவைகளின் கணக்கெடுப்பு தொடங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பு சூழல் குறித்த உயர்நிலைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

உள்துறை செயலாளர் திரு. கோவிந்த் மோகன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், துணை ராணுவப் படையினர், புலனாய்வு முகமை உள்ளிட்ட அமைப்புகளின் உயரதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

இதில் ஜம்மு காஷ்மீரில் தற்போதுள்ள பாதுகாப்பு சூழல் குறித்து விரிவாக விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

சிரியாவில் பாதுகாப்புப் படையினருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட கலவரத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரமாக அதிகரித்துள்ளது.

அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 16 வீரர்கள் உயிரிழந்ததை அடுத்து இந்த வன்முறைச் சம்பவம் ஏற்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து, துணை ராணுவப் படையினர் நடத்திய தாக்குதலில், பலர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவங்களில் அந்நாட்டு பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 125 வீரர்கள் மற்றும் முன்னாள் அதிபருக்கு ஆதரவான கிளர்ச்சியாளர்கள் 148 பேரும் உயிரிழந்துள்ளதாக அந்த தகவல்கள் மேலும் கூறுகின்றன.

>>>>><<<<<

கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் ஜம்மு காஷ்மீரின் குல்மர்கில் இன்று தொடங்குகிறது.

கடந்தமாதம் 22ஆம் தேதி முதல் 25ஆம் தேதிவரை நடைபெறுவதாக இருந்த இப்போட்டிகள் குறைவான பனிப்பொழிவு காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதில் பனிச்சறுக்கு, ஐஸ் ஹாக்கி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெறவுள்ளன.

>>>>><<<<<

மும்பையில் நடைபெறும் ஸ்னூக்கர் இறுதிப்போட்டியில் பங்கஜ் அத்வானி – **Ishpreet Singh Chadha –** வை எதிர்கொள்கிறார்.

>>>>><<<<<

உலக பாரா தடகள போட்டிகள் புதுதில்லியில் நாளை மறுநாள் தொடங்குகிறது. இப்போட்டிகளில் ஜெர்மனி, ஜப்பான், ஆஸ்திரேலியா, சவுதி அரேபியா உள்ளிட்ட 19 நாடுகளைச் சேர்ந்த 105 பாரா தடகள வீரர்கள் பங்கேற்கின்றனர்.

>>>>><<<<<

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று நியூசிலாந்தை எதிர்கொள்கிறது. துபாயில் இப்போட்டி பிற்பகல் மணி 2.30-க்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை - ஜம்ஷெட்பூர் அணியை எதிர்கொள்கிறது. சென்னையில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>END<<<<<